Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/07-09

தேவனுக்குப்
பயந்து
அவர் கற்பனைகளைக்
கைக்கொள்
எல்லா மனுஷர் மேலும்
விழுந்த கடமை இதுவே



Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,
Srinagar Colony,Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,
Royapettah,Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy





# கர்த்தருக்கு பயப்படுகிற பயம்

**சகோதரி. நிஜா கென்னடி**

கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது, தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? என்று அவரை முழுமையாக, சரியாக அறிந்து வைத்திருப்பது. கர்த்தரைப் போல பரிசுத்தமுள்ளவர் இல்லை. நம் தேவன் பரிசுத்தர், அன்புள்ளவர், சர்வ வல்லமையுள்ள தேவன், நீதியும் நியாயமுள்ள தேவன், உண்மையுள்ளவர், எல்லாம் அறிந்தவர், எல்லா அதிகாரத்தையும் உடையவர், ஞானமுள்ளவர், சர்வ லோகத்தையும் சிருஷ்டித்தவர். தேவனைப் பற்றி முழுமையாக அறிந்து வைத்திருந்தோமானால், நம்மைப் பற்றியும் தெளிவாக புரிந்து கொள்ளலாம். நாம் குறைவுள்ளவர்கள், பெலவீனமானவர்கள், பாவம் நிறைந்தவர்கள், பரிசுத்தமில்லாதவர்கள் என்பதை உணர்ந்து கொண்டோமானால் நம்மை தாழ்த்தி, தேவனை உயர்த்தி கனப்படுத்துவோம். அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் தமது வழியை காட்டுவார். போதித்து வழி நடத்துவார்.

*கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார்.*

*- சங்கீதம் 25 : 12*

கர்த்தருக்கு பயந்து வாழ்பவர்கள் வேத வார்த்தையின்படி



நடப்பார்கள்; தேவனை பின்பற்றி அனுதினமும் வாழ்வார்கள். இரண்டு வழிகள் இந்த உலகத்தில் உண்டு. ஒன்று தேவனுடைய வழியை தெரிந்து கொண்டு அவருக்கு பயந்து அவருடைய கற்பனைகளின்படி வாழ்வது. இன்னொன்று மனிதனுடைய வழி, தன் சுய இஷ்டப்படி வாழ்வது. நாம் இந்த உலகத்தில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். அதை தெரிந்து கொள்ளும் உரிமை நம்மிடத்தில்தான் உள்ளது. தேவன் அந்த உரிமையை நமக்கு கொடுத்துள்ளார். தேவன் அவருடைய வார்த்தையின்படி நாம் வாழவே விரும்புகிறார். அதற்கென்றே வேதபுத்தகத்தை நமது கரத்தில் கொடுத்துள்ளார். தேவன் நம்மை ஒருபோதும் அவருடைய வழியில் நடக்க வற்புறுத்தவே மாட்டார். நாமாகவே அவரண்டை வருகிறோமா? வேதவார்த்தையின்படி நடக்கிறோமா? அனுதினமும் அவரோடே கூட உறவாடுகிறோமா? என்று பொறுமையோடு நமக்காக காத்துக்கொண்டேயிருக்கிறார். நாம் அவருடைய வழியில் நடக்காதபோது கூட அவர் நம்மை நேசிக்கிறார். பூமியெங்கும் அவருடைய கண்கள் உலாவிக் கொண்டிருக்கிறது. தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார் (சங்கீதம் 53 : 2). நாம் கர்த்தருக்கு பயந்து வாழும்போது, எப்பொழுதும் கர்த்தர் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு கூட நடந்து கொள்வோம். ஏனென்றால் கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை. இருதயத்தின் நினைவுகளையும், நம் அந்தரங்க வாழ்க்கையையும்கூட தேவன் அறிவார். அவருக்கு சகலமும் பகிரங்கமாயும், வெளியரங்கமுமாய் இருக்கிறது. நம் இருதயத்தின் எண்ணங்களை யார் அறிவார் என்று நாம் எண்ணக்கூடாது. கர்த்தர் நம் நினைவுகளையும், கிரியைகளையும் அறிந்திருக்கிறார். ஆதலால் நாம் எண்ணங்களில் கவனமாயிருக்க வேண்டும். துர்ச்சிந்தனைகளுள்ள (ஏமாற்றும் மற்றும் தந்திரகுணமுள்ள) மனுஷனை தேவன் ஆக்கினைக்குட்படுத்துவார் (நீதிமொழிகள் 12 : 2). பக்கத்து தேசத்திலே ராஜா பேசும் ரகசிய காரியங்களைக்கூட தீர்க்கதரிசியாகிய எலிசாவுக்கு தேவன் வெளிப்படுத்தினார் (2 இராஜாக்கள் 6 : 12). அனனியாவும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் நிலத்தை விற்ற பணத்தை முழுமையாக அப்போஸ்தலரிடம் கொடுக்காமல், தங்களுக்கென்று ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக் கொண்டார்கள். அவர்கள் இரகசியமாக செய்ததைக் கூட தேவன் பேதுருவுக்கு வெளிப்படுத்தினார். ஆதலால் அந்தரங்கமாக என்ன பேசுகிறோம், என்ன முடிவுகளை எடுக்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

*ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.*

*- பிரசங்கி 12 : 14*

தேவனுக்கு சித்தமில்லாத காரியங்களில் செயல்படுவதை தவிர்ப்போம். யாரும் அந்த இடத்தில் இல்லை என்று நினைத்து, நாம் தேவனுக்கு பிரியமில்லாத சம்பாஷணைகளையும், மற்றவர்களைக் குறித்து தவறாகப் பேசுவதையும், குறை சொல்லுவதையும் நிறுத்துவோம். நாம் அப்படி பேசும்போது, கர்த்தர் அதை கேட்டுக் கொண்டிருக்கிறார். அதனால் நாம் எப்பொழுதும் கர்த்தருக்கு பயந்து நடக்க வேண்டும். எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான் என்று வேதம் கூறுகிறது (நீதிமொழிகள் 28 : 14). நாம் பேசும் ஒவ்வொரு உரையாடலையும் கர்த்தர் உற்று கவனிக்கிறார் என்ற வாசகத்தை சில வீடுகளில் சட்டம் போட்டு மாட்டியிருப்பார்கள். நம் தேவன், நம்முடைய மாம்ச கண்களால் காணமுடியாத ஆவியாய் இருக்கிற தேவன். ஆகையால் நம் வாயின் வார்த்தைகளில் கவனமாயிருப்போம். சொற்களின் மிகுதியினால் பாவமில்லாமல் போகாது.

*தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் ; பெருமையையும், அகந்தையையும், தீய வழிகளையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்.*

*- நீதிமொழிகள் 8 : 13*

மற்றவர்களைவிட தன்னை பெரியவனாக நினைப்பதையும், தீமையையும், பெருமையையும், தீய வழிகளையும், பொய்பேசும் நாவையும் கர்த்தர் வெறுக்கிறார். நாமும் கர்த்தர் வெறுக்கும் காரியங்களை வெறுத்து அவைகளுக்கு விலகியிருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்படும் பயம் இருந்தால்தான் தீமைக்கு விலக்கி நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

பரிசேயர்கள், மனிதர்கள் தங்களை புகழ வேண்டும் என்பதற்காக பக்தியுள்ளவர்கள்போல் நடந்தார்கள். ஆனால் மாம்சத்தில் வந்த தேவனாகிய இயேசு கிறிஸ்து அவர்கள் இருதயத்தை அறிந்திருந்தார். மனுஷர்கள் முன்பு தங்களை நல்லவர்களாக காட்ட விரும்பினார்கள். தேவன் இதை வெறுத்தார் (லூக்கா 16 : 15). ஜனங்கள் மனிதனின் வெளித்தோற்றத்தைப் பார்ப்பார்கள். கர்த்தரோ அவன் இருதயத்தைப் பார்க்கிறார். ஆதலால் வெளிதோற்றத்தையும், புறநடவடிக்கைகளையும் ஆதாரமாக வைத்து



யாரையும் தீர்ப்பு செய்யக்கூடாது. தேவனே உள்ளத்தை பார்க்க முடியும். மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ இருதயங்களை (ஆவிகளை) நிறுத்து பார்க்கிறார் (நீதிமொழிகள் 16:2).

மனிதன் தான் செய்கிற காரியமெல்லாம் சரியானது என்று நினைத்து, தன் சுய புத்தியின்மேல் சாய்ந்து, தன் குறைந்த அறிவின்படி எல்லாவற்றையும் செய்தால், அவன் செய்பவற்றின் விளைவு எப்படி இருக்கும் என்று அவனுக்குத் தெரியாது. கர்த்தரே அதை அறிவார். ஆதலால் நாம் ஒரு காரியத்தை செய்யும் முன்பே அது கர்த்தருக்கு பிரியம்தானா, நாம் இவ்வாறு செயல்படலாமா என்று சிந்தித்து செயல்படுதல் அவசியம். நாம் நம்முடைய சுயபுத்தியின்படி நடந்தால், பல கஷ்டங்கள் நம் வாழ்க்கையில் வரும். ஆதலால் கர்த்தருக்கு பயந்து தீமைக்கு விலகி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தேவனோடு மிகவும் நெருக்கமான உறவுடன் நாம் வாழும்போது தேவன் நம்மை பரிபூரணப்படுத்துவார். ஏனென்றால் நாம் கர்த்தரையே முழுமையாக சார்ந்து இருப்பதால் என்ன கஷ்டங்கள் நம் வாழ்க்கையில் வந்தாலும் நம்மை அசைக்க முடியாது. நாம் என்ன காரியங்களை செய்தாலும், முக்கியமான முடிவுகளை எடுக்கும்போதும், ஜெபத்தோடுகூட, தேவ சித்தத்தை அறிந்து அதன்படி எல்லா முடிவுகளையும் எடுக்க வேண்டும். அப்பொழுது நமது வாழ்க்கை சமாதானமுள்ளதாய் இருக்கும். எந்த தீமையும் நம்மை அணுக முடியாது.

## கர்த்தருக்கு பயப்படுதலும், ஞானமும்

*கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் ; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்.*

*- நீதிமொழிகள் 1 : 7*

கர்த்தரை கனம் பண்ணி அவருக்கு கீழ்ப்படிந்து இருக்கும்போது ஞானம் வரும். அந்த ஞானத்தினாலே தேவனை அறிய வேண்டிய விதத்தில் அறிந்து கொள்வோம். அப்படி அறிந்து கொள்வதால் நல்வழியில் நடக்க ஆரம்பிப்போம். கர்த்தர் மீதுள்ள அன்பினால், மதிப்பினால், அவர் மீதுள்ள மரியாதையினால் பயத்தோடு அவருக்கு கீழ்ப்படிந்து நடப்பதை கற்றுக் கொள்வோம். இதுவே உண்மையான ஞானம். நம் எல்லோரைக் காட்டிலும் தேவனே ஞானமுள்ளவர். கர்த்தரை கனம் பண்ணாதவர்கள், ஞானத்தையும், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதையும் வெறுக்கிறார்கள். தனக்குத்தான்

எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்கள், மற்றவர்களுக்கு தீங்கு விளைவித்து, தொந்தரவு செய்து, எல்லா காரியத்திலும் அகந்தை எண்ணம் கொண்டவர்களாய், மன மேட்டிமையோடும் கோபத்தோடும் இருந்து, எதையும் புதிதாக கற்றுக்கொள்ள மறுப்பர். சாலொமோன் ஞானி இப்படிப்பட்டவர்களை மூடன் என்று கூறுகிறார். நாம் நற்குணமுள்ளவர்களாக, நீதியும் நியாயமுள்ளவர்களாக, தாழ்மையுள்ளவர்களாக, நல்ல நடத்தையுள்ளவர்களாக மாற வேண்டும். நமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைக்காமல் மற்றவர்கள் கூறும் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்பவர்களாக மாற வேண்டும். மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்பவர்களாகவும் தேவன் மாத்திரம் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

*கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தை போதிக்கும் ; மேன்மைக்கு முன்னானது தாழ்மை.*

*- நீதிமொழிகள் 15 : 33*

உண்மையாய் கர்த்தரை கனம் பண்ணுகிறவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருப்பார்கள். நாம், நமது குடும்பம், தாலந்துகள், வேலை, மேலும் நமக்குள்ள யாவும் கர்த்தர் நமக்கு கொடுத்தவை என்று உணர்ந்தால் நாம் தாழ்மையோடு இருப்போம். அப்படி நாம் எல்லா சூழ்நிலைகளிலும், எப்போதும் தாழ்மையோடு கூட நடந்து கொள்ளும்போது தேவன் நம்மை உயர்த்துவார். மற்றவர்களை விட தன்னை பெரியவனாக நினைப்பவன் விழுந்து போவான் (நீதிமொழிகள் 16:18). அகந்தையையும் மேட்டிமையையும் நம்மை விட்டு அகற்றி தாழ்மையோடு இருக்க கற்றுக் கொள்ள வேண்டும், அப்பொழுது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

*நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.*

*- மீகா 6 : 8*

## கர்த்தருக்கு பயப்படுவதின் மேன்மை

*ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம் ; பொல்லாப்புக்கு விலகுவதே புத்தி.*

*- யோபு 28 : 28*

தேவனுடைய அதிகாரத்தையும், ஆற்றலையும், மேன்மையான



குணத்தையும் நினைத்து, அவருடைய கட்டளைகளுக்கும், நியாயங்களுக்கும் கீழ்ப்படிந்து நாம் நடக்கும்போது ஞானமும் அறிவும் நமக்குள் வரும். கர்த்தரை அறியாத ஜனங்கள் நம் வாழ்க்கையை பார்க்கும்போது, உண்மையாகவே இவர்கள் ஞானமுள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்வார்கள்.

யோபு நல்லவனும், உண்மையுள்ளவனும் தேவனுக்கு பயந்து தீமைக்கு விலகியுமிருந்தான். கர்த்தர் யோபுவைக் குறித்து, "கர்த்தருக்கு பயப்படுகிறவன்" என்று சாட்சி கொடுக்கிறார். கர்த்தர் சாத்தானிடம் என் மகன் யோபுவைப் பார்த்தாயா என்று கேட்கும் அளவுக்கு யோபு கர்த்தர் மேல் வைராக்கியமாயிருந்தான். சாத்தான் எவ்வளவு அவனை சோதித்த போதும், கர்த்தர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன் என்று யோபு அறிக்கையிடுகிறான். அவனுடைய மனைவி அவன்படும் கஷ்டத்தைப் பார்த்து தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். ஆனால் யோபுவோ தனக்குள்ள எல்லாவற்றையும் இழந்தபிறகும் கர்த்தரையே நோக்கிப் பார்க்கிறான். அந்த நம்பிக்கையை கர்த்தர் கனப்படுத்துகிறார். எப்படியென்றால் யோபு இழந்த எல்லாவற்றையும் கர்த்தர் இரட்டத்தனையாய் திருப்பிக் கொடுக்கிறார். அதுமட்டுமல்ல யோபு தன்னுடைய குடும்பத்தில் நாலாந்தலைமுறையையும் காணச் செய்கிறார். ஆம், பிரியமானவர்களே! கர்த்தருக்கு பயந்து அவருக்கு உங்கள் வாழ்க்கையில் யோபுவைப் போல பிரதானமான இடத்தைக் கொடுத்தீர்களென்றால் உங்களையும் இரட்டத்தனையாய் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். அவரை கனப்படுத்துகிறவர்களை, அவர் கனப்படுத்துகிறவராய் இருக்கிறார்.



கொர்நேலியு கர்த்தரை கனம் பண்ணுகிறவனாயிருந்தான். தன் குடும்பத்தாரை தேவனுக்கு பயப்படும் பயத்தில் வழி நடத்தினான்.

தேவையிலிருந்த ஜனங்களுக்கு தான தருமங்களைச் செய்தான். தேவனிடம் எப்பொழுதும் ஜெபிக்கிறவனாயிருந்தான். யூதனல்லாதபோதுகூட கர்த்தரை வாஞ்சையோடு தேடினான். அதனால் கர்த்தர் பேதுருவை கொர்நேலியுவின் வீட்டிற்கு அனுப்பி வேதத்தின் காரியங்களை விளக்கிச் சொல்ல வைக்கிறார். அவன் தன் குடும்பத்தினரோடும், நண்பர்களோடும் காத்திருந்தான் என்பது கர்த்தர் மேலுள்ள வாஞ்சையைக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினாலே அவர்கள் எல்லோரையும் அபிஷேகிக்கிறார். கொர்நேலியு கர்த்தருக்கு பயந்து, அவரை கனப்படுத்தினதால் கர்த்தர் அவனை எப்படி கனப்படுத்துகிறார் பாருங்கள். நம் இருதயத்தில் கர்த்தருக்கு எந்த அளவு இடம் கொடுத்து, அவரை கனப்படுத்துகிறோமோ, அந்த அளவு கர்த்தர் நம்மை கனப்படுத்துவார்.

கர்த்தரை எப்பொழுதும் கனப்படுத்தும்படிக்கு வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கென்று கொடுக்கவேண்டும். ஏனென்றால் நம்மை உண்டாக்கினது, நாம் செய்யும் காரியங்களையெல்லாம் வாய்க்கச் செய்வது, அதற்கான பலனை தருவது, நாம் ஜீவனோடிருப்பது எல்லாமே கர்த்தரால் மாத்திரமே என்பதை நாம் இருதயத்திலே உணர்ந்து கொண்டதை வெளிப்படுத்தும் ஒரு காரியமே தசமபாகம் கொடுப்பது. வெள்ளியும் பொன்னும் அவருடையது. பரலோகத்தையும், பூலோகத்தையும் உண்டாக்கினவர் அவர். நாம் கொடுத்து அவர் தம்முடைய ராஜ்ஜியத்தை கட்டப்போவதில்லை. நமது நன்றியை வெளிப்படுத்தும் ஒரு காரியமே தசமபாகம் கொடுப்பது. அப்படி நாம் கொடுக்கும்போது தேவைக்கும் அதிகமான ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்வோம் (மல்கியா 3 : 10).

## ஆசீர்வாதங்கள்

கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளைப் பின்பற்றி வாழ்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் சந்ததியும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். கர்த்தர் ஆஸ்தியையும், ஐசுவரியத்தையும் கனத்தையும் நீடிய ஆயுளையும் தருகிறார். தேவனுடைய பாதுகாப்பு அவர்கள் மேலிருக்கும் (சங்கீதம் 34 : 7). அவர்கள் சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் திருப்தியான வாழ்க்கை வாழ்வார்கள். கர்த்தர் தாம் வருங்காலத்தில் செய்யப்போகும் காரியங்களையும், அதாவது தேவரகசியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துவார். அவர்களுடைய முந்தின தலைமுறையினருக்கு எந்தவிதமான ஆசீர்வாதங்களையெல்லாம் வாக்குத்தத்தமாகக் கொடுத்தாரோ, அவற்றை இவர்களிடத்தில் நினைவுகூர்ந்து



நிறைவேற்றுவார். அவர்களுக்கு எந்தவிதமான ஆபத்துகள் வரலாம் என்பதை முன்கூட்டியே சொல்லி ஆபத்துக்கு விலக்கி அவர்களை பாதுகாப்பார் (சங்கீதம் 25 : 12-14). அவர்கள் கர்த்தரையே நம்பியிருப்பதால், என்ன கஷ்டங்கள் வந்தாலும் பயப்படமாட்டார்கள். மற்றவர்களுக்கு இரங்கி கடன் கொடுத்து உதவி செய்யும் தயாள குணத்தை உடையவர்களாய் இருப்பதால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். நன்மையும், கிருபையும் அவர்களைப் பின் தொடரும். பண ஆசையில்லாதவர்களாய், பணத்தை நம்பாமல் தேவனையே நம்பியிருப்பார்கள். நியாயமான வழியில் பணத்தை சம்பாதிப்பார்கள். தாராள குணமுடையவர்களாய், ஏழைகளுக்கு கொடுக்கிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தருக்கு பயந்து அவருக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களை கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

இரண்டு குடும்பங்கள் இருந்தது. ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவிலும், நியாயமான முறையில் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றும், பணத்தின்மேல் ஆசையில்லாதவர்களாயும், மற்றவர்களுடைய பொருட்களின் மேல் ஆசையில்லாதவர்களாயும், மற்றவர்களுக்கு கொடுக்கிறவர்களாயும், எல்லோரையும் பட்சபாதமின்றி நேசிக்கிறவர்களாகவும் வளர்க்கப்பட்டார்கள். பெற்றோர் சிறு பிராயத்திலிருந்தே பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களையும், வேதத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் கற்றுக் கொடுத்திருந்தார்கள். பிள்ளைகளுக்காக பெற்றோர், தினமும் பாரத்தோடு ஜெபித்தார்கள். அந்தப் பிள்ளைகளுடைய வாழ்க்கை பிற்காலத்தில் ஆசீர்வதிக்கப்பட்டதாயும், ஏழை எளியவர்களுக்கு கொடுக்கிறவர்களாயும், உதாரத்துவ குணமுள்ளவர்களாகவும் தங்களுக்கு இருப்பதில் திருப்தியோடு இருந்தார்கள்.

ஆனால் இன்னொரு குடும்பத்தில் உள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை, கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்க்கவில்லை. நியாயமற்றவர்களாகவும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்றும், பணத்தின் மேல் ஆசையுள்ளவர்களாக, மற்றவர்களுடைய பொருட்கள் மேல் ஆசையுள்ளவர்களாய், சுயநலமுள்ளவர்களாக வளர்க்கப்பட்டார்கள். பிற்காலத்தில் அந்த பிள்ளைகளின் வாழ்க்கையோ வேதனையளிப்பதாக இருந்தது. மற்றவர்கள் பார்த்து பரிதாபப் படுமளவிற்கு இருந்தது. கர்த்தருக்கு பயப்படும்பயம் அவர்களுக்கு இல்லாததால், பெற்றோருக்கு பாரமாகவும், சுற்றியிருப்பவர்களுக்கு பாரமாகவும், அடங்காதவர்களாகவும், மற்றவர்களை மதிக்காதவர்களாகவும் காணப்பட்டார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களைப் பார்க்காமல், மற்றவர்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு

தங்களோடு ஒப்பிட்டு பார்த்து, தங்களையே வேதனைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். தங்களை தாங்களே மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு அந்த பிள்ளைகளின் வாழ்க்கை இருந்தது.

அன்பு பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளருங்கள் (நீதிமொழிகள் 2 : 5). பணத்தின்மேல், பொருட்கள்மேல் ஆசையில்லாதவர்களாக, சுயநலமில்லாதவர்களாக, கஞ்சத்தனமற்றவர்களாக, ஏழை எளிய ஜனங்களுக்கு கொடுக்கிறவர்களாக, பிறரை மதிக்கிறவர்களாக, கபடற்றவர்களாக, வஞ்சகமற்றவர்களாக, பட்சபாதமற்றவர்களாக, மற்றவர்களிடம் வாங்குபவர்களாக அல்ல, மற்றவர்களுக்கு கொடுக்கிற-வர்களாக (அப்போஸ்தலர் 20 : 33), கொடுக்கும்போது முழுமனதோடு கொடுப்பவர்களாக, தாழ்மையுள்ளவர்களாய், இரக்கமுள்ளவர்களாய், தன்னைபோல பிறரையும் நேசிக்கிறவர்களாய், சிறு பிராயத்திலிருந்தே வாழ கற்றுக்கொடுத்து வளருங்கள். நீங்களும் அப்படியாக வாழ்ந்து காண்பியுங்கள். கர்த்தர் உங்களுக்கு கொடுத்த பிள்ளைகளை தேவபக்தி உள்ள பிள்ளைகளாய் வளருங்கள். சிறுபிராயத்திலிருந்தே தவறுகளை கண்டித்து உணர்த்தி சரி செய்யுங்கள், பிற்காலத்தில் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் அது ஆசீர்வாதமாக இருக்கும்.



பிரம்பும், கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான் (நீதிமொழிகள் 29:15). உண்மையாய் உங்கள் பிள்ளைகளை நேசிப்பீர்களென்றால் கெட்ட செயல்கள், கீழ்ப்படியாமை, பொய் சொல்லுதல் போன்ற பழக்கவழக்கங்களை செய்யாதபடி கண்டித்து திருத்துங்கள். அளவுக்கு அதிகமாகவும் பிள்ளைகளை அடிக்கக் கூடாது. ஒழுங்கில்லாமல் வளரும் பிள்ளைகளின் வாழ்க்கை, பிற்காலத்தில் வேதனையளிப்பதாயிருக்கும்.

தேவ பயமில்லாதவர்கள், நாம் ஏன் தேவனை தொழுதுகொள்ள வேண்டும் என்றும், தேவனை நோக்கி ஜெபிப்பதினால் நமக்கு என்ன



பிரயோஜனம் என்றும் சொல்லி, அவருடைய வழியை அறிய விரும்பாமல், தேவனின் வாஞ்சையையும், தேவனின் விருப்பத்தையும் பற்றி கவலைப்படுவதில்லை. அவர்களின் ஆசை நிறைவேறாது. தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து இருப்பவர்களுக்கு தேவ கரம் துணையாயிருக்கும் (சங்கீதம் 119 : 173). தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் தேவ கோபம் நம்மேல் வரும். ஆதலால் பாவத்திலிருந்து மனந்திரும்புவோம். பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வோம். தேவனுடைய வார்த்தையை தியானித்து அதன்படி வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே (பிரசங்கி 12 : 13).

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடிருப்பதாக!*

### *சந்தா விபரம்*

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-
வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*
*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

### *எங்களது முகவரி*

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*
**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**
**E-mail : nijakennedy@yahoo.com**
*இணையதளம் :* **www.kennedyministries.org**




இசை உலகில் இருந்து கர்த்தரண்டை வந்தவர் போதகர் போப் காய் (Bob Coy) தனது சகோதரன் சொன்னதன் பேரில் வேதத்தை எடுத்து படித்தபோது, போப் காயின் கண்களில் பட்ட வசனம் :

*தேவன் இந்த உலகத்தை நேசித்ததினால், தம்முடைய ஒரே குமாரனை அவரை விசுவாசிப்பவர்களுக்காகத் தந்தார்* என்பதே. அந்த வார்த்தை அவரை ஆண்டவரண்டை நடத்தியது.

இவரது சபை அமெரிக்காவின் தெற்கு ஃப்ளோரிடாவில் உள்ளது. (10 தலைசிறந்த சபைகளில் ஒன்றாகும்)

❖ நமக்கு பொருளாதார நெருக்கடிகள் இருக்கலாம். ஒரு சத்தியத்தை நாம் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும். நம் தேவன் அதைத் தர உண்மையுள்ளவராயிருக்கிறார். அவருடைய சந்தோஷத்திற்காக அவர் செய்வதில்லை. அவருடைய குணாதிசயம் அது. நாம் எதிர்பார்க்கும் வழியில் அது வராமல் போகலாம், ஆனால் நிச்சயமாக வரும்.

❖ வாழ்க்கையில் சில சமயங்களில் நாம் தனியாக இருப்பதுபோல் இருக்கும். ஆனால் உண்மை நிலை அப்படி அல்ல. ஆண்டவர் நம்மோடுகூட எப்போதும் இருக்கிறார். உலகத்தின் முடிவுபரியந்தம் நாள் உங்களோடுகூட இருப்பேன் என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாக்கு கொடுத்திருக்கிறார்.

❖ கர்த்தர் எப்போதும் நமக்கு உச்சிதமானதையே கொடுக்க விரும்புகிறார். நீங்கள் யாராகவும் இருக்கலாம். அவருக்கு வெகு காலமாக ஊழியம் செய்பவராகவும் இருக்கலாம் அல்லது அவரோடு பேசி வெகு காலமாக இருக்கலாம். உங்கள் சொத்து முழுவதையும் அவருக்குக் கொடுத்திருக்கலாம் அல்லது ஒரு பைசாகூட அவருக்குக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் அவருக்குக் கவலை இல்லை. அவருடைய சிந்தையெல்லாம், நோக்கமெல்லாம் நாம் செய்யும் எல்லாக் காரியத்தையும் வாய்க்கச் செய்ய வேண்டும், நாம் விரும்புவதைக் காட்டிலும் மேலான உச்சிதமானதை நமக்கு கொடுக்க வேண்டுமென்பதே. தற்பொழுது நம் வாழ்க்கையில் நடப்பது எல்லாம் நன்மையானதாக நமக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால், காலம் சற்று நகர்ந்தபின்பு அறிந்துகொள்வீர்கள், கர்த்தர் எவ்வளவு நல்லதை நமக்கு செய்தார் என்று

❖ நாம் செய்யாத தவறை, செய்ததாக சிலசமயம் குற்றம் சுமத்தப்படுவோம். ஏனென்றால் இந்த உலகம் பூரணமான ஒன்று அல்ல. பூரணப்படாத ஜனங்கள் வாழும் இந்த பூமியிலே எல்லாம் பூரணமாக இருக்காது. நாமும் கூட ஒரு வகையில் பூரணமானவர்கள் கிடையாது. நம் தேவன் உண்மையுள்ள, நீதியுள்ள தேவன் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. அவருடைய அன்பு எப்போதும் நமக்கு உண்டு என்பதை கருத்தில் கொள்ளுங்கள்.

❖ நம் வாழ்க்கையில் பல நெருக்கடிகள் வரலாம். தீராத நோய் வரலாம். இயற்கை சீற்றம் கொள்ளலாம். அரசியலில் நிலையில்லாத தன்மை ஏற்படலாம், பொருளாதாரம் சரியலாம். நீங்கள் நினைக்கலாம், எல்லாமே கட்டுப்பாட்டை இழந்துவிட்டது என்று. அடுத்து என்ன நடக்குமோ என்று பதட்டப்படாதீர்கள். எல்லாவற்றுக்கும் மேலான தேவனின் கட்டுப்பாட்டிலேயே எல்லாம் உள்ளது. இவை எல்லாவற்றைக்காட்டிலும் பெரியவர் அவரே. அவர்தான் எல்லாவற்றையும் உண்டாக்கினவர். கர்த்தர், எப்போதும் தம் படைப்புகள் மேல் அதிகாரம் உள்ளவராகவே இருக்கிறார்.

❖ நாம் எப்படி ஒரு தொலைபேசி எண்ணையோ அல்லது முகவரியையோ எழுதி வைக்கிறோமோ அப்படிப்போல நம்மையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் கைகளில் வரைந்து வைத்திருக்கிறார். ஆம், சிலுவையில் அவர் பட்டகாயங்களின் தழும்புகளே அவர் நம்மேல் எவ்வளவாக அன்பு கூறுகிறார் என்பதன் அடையாளம்.

❖ உங்களது எதிர்பார்ப்புகளை கர்த்தர் நிறைவேற்றாமல் இருந்தால் ஏமாற்றமடைந்து விடாதீர்கள். அவர் எல்லாவற்றையும் திட்டமிட்டு செய்து கெண்டிருக்கிறார். உங்களுக்கு ஏன் செய்யவில்லை என்பதற்கு சரியான காரணம் வைத்திருப்பார். அதனால் பாரத்தை அவரிடமே வைத்துவிடுங்கள்.

❖ இந்த உலகத்தில் நாம் ஏமாற்றப்படலாம், நிராகரிக்கப்படலாம், ஒதுக்கப்படலாம், ஏளனம் செய்யப்படலாம். ஆனால் இயேசு கிறிஸ்து ஒரு போதும் நம்மைத் தள்ளவே மாட்டார். எவ்வளவு ஆறுதலான காரியம் அது.

❖ நமக்கு எல்லாம் இருந்தாலும் ஞானம் அவசியம். நமக்கு உள்ளதை பயன்படுத்த ஞானம் வேண்டும். ஞானம் இல்லாமல் மற்றவை எல்லாம் இருந்தாலும் பிரயோஜனமில்லை.

# கேட்கிறதைக் கவனியுங்கள் ②



ஒரு மரத்தின் கனியை வைத்தே அந்த மரத்தைப் பற்றித் தீர்மானிக்கிறோம். கனி நல்லதென்றால் மரமும் நல்லது என்று தீர்மானிக்கிறோம். கனி கெட்டதென்றால் மரமும் கெட்டது என்று தீர்மானிக்கிறோம். அதேபோலத்தான் நம்முடைய ஜீவிதமும். நம்முடைய பேச்சு, நடத்தை எப்படி இருக்கின்றதோ அப்படியேத்தான் நமது மனதும், இருதயமும், குணாதிசயங்களும் இருக்கும்.

நாம், எப்படிப்பட்டக் காரியங்களைத் தொடர்ந்து பார்க்கின்றோம், கேட்கின்றோம், நினைக்கின்றோம் என்பதைப் பொறுத்தே நமது மனதும், இருதயமும், குணாதிசயங்களும் இருக்கும். எப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்கின்றோம், தொலைக்காட்சியில் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றோம் என்பது மிகவும் முக்கியம். ஏனென்றால், இவைகள்தான் நம் சிந்தனை மண்டலத்தை எட்டி நம்மை இவற்றைப்பற்றி சிந்திக்க வைக்கிறது. நமது சிந்தனைதான் நம்மை செயல்பட வைக்கிறது. தொடர்ந்து நாம் எப்படி செயல்படுகிறோமோ அதுவே நமது குணாதிசயமாகிறது.

ஒரு டைப்ரைட்டரை இயக்குவதும், படம் வரைவதும், வயலின் வாசிப்பதும், தையல் மிஷினை இயக்குவதும் தொடர்ந்து அவற்றை செய்ய நாம் பழகுவதாலேயே வருகின்றது. அதுபோல, எதைப் படிக்க வேண்டும், எதைப் படிக்கக்கூடாது என்பதையும், நாம் முதலாவது முடிவு செய்ய வேண்டும். நம்முடைய கண், காது, மூக்கு, வாய், கை வழியே எவை நமக்குள் செல்லுகின்றன என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். இதையே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, “கேட்கிறதைக் கவனியுங்கள்” என்கிறார். நமக்குள் செல்லும் காரியங்களே நமது உணர்வுகளைத்



தூண்டுகிறது. அந்த உணர்வின் நிமித்தம் நாம் செயல்படுகிறோம்.

உதாரணமாக, நீங்கள் ஒரு புத்தகத்தை படிக்கும்போதோ, தொலைக்காட்சியில் சில நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போதோ, ஒருவர் பேசும் சில காரியங்களைக் கேட்கும்போதோ என்ன நடக்கிறது? முதலாவது அதில் கவனம் செலுத்துகிறீர்கள். அவையெல்லாம் (புத்தகம் படிப்பதும், தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைப் பார்ப்பதும், ஒருத்தர் பேசியதை கேட்டதும்) முடிந்த பின்னரும் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பிக்கிறீர்கள். இப்பொழுது உங்களது மனது அந்த நினைவுகளில்தான் இருக்கிறதேயொழிய இந்த நேரத்தில் இல்லை. உங்களது முழு கவனமும் இப்பொழுது நீங்கள் செய்யும் காரியத்தில் இல்லை. உங்களது சரீரம் நிகழ் காலத்திலும், உங்களது மனதோ இறந்த காலத்தில் பாதியும் நிகழ் காலத்தில் பாதியுமாக இருக்கிறது. உங்களது கவனம் சிதைந்துபோய் விட்டது. உங்களது ஆற்றலை இழந்து போனீர்கள். உங்களது அந்த நினைவுகள் நல்லதைப் பற்றியதா அல்லது கெட்டதைப் பற்றியதா என்று யோசித்துப் பார்த்தீர்களென்றால் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

***அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.***

***- நீதிமொழிகள் 23 : 7***

ஆம், எனக்குப் பிரியமானவர்களே, சிலர் நம்மிடம் மிகவும் அன்புள்ளவர்கள்போலப் பேசுவார்கள். ஆனால், அவர்களுடைய உள்ளத்திலோ நம்மை வெறுப்பவர்களாகவோ, நம்மீது கசப்போ, பொறாமையோ உள்ளவர்களாக இருப்பார்கள். வெளியே இனிப்பு, உள்ளே கசப்பு. அவர்களது பேச்சை வைத்து, நாம் அவர்களை நிதானித்தோமானால் நம் முடிவு தவறானதாகும். அதனால்தான் ஒருவர் நம்மிடம் பேசும்போது, அதை கவனமாகக் கேட்கச் சொல்கிறார் நம் பரம தகப்பன். அப்படி நாம் கவனமாகக் கேட்கும்போது, பேசுபவருடைய பேச்சையல்ல, அவருடைய உள்ளத்தை நாம் அறிந்துகொள்ளலாம். இது, நமது அறிவினாலோ, புத்திசாலித்தனத்தினாலோ சாத்தியப்படாது. கர்த்தருடைய வார்த்தை தரும் ஞானத்தினால், ஆம், தேவனுடைய ஞானத்தினாலேயே ஒருவருடைய உள்ளத்தை, குணாதிசயத்தை நாம் அறிந்துகொள்ள முடியும்.

- தொடரும்